1974 மார்ச் 26]

பல சிக்கல்கள் ஏற்படக்கூடும்—எந்த எந்த ஊர்களிலிருந்து மக்கள் அந்த அந்த ஊர்களினுடைய பெயர்களை மாற்ற வேண்டுமென்று சொல்கிருர்களோ, அவற்றையெல்லாம் ஒரே தடவையில் மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகையாலே என்பது மாறி இன்றைக்கு புதியன கழிதலும் பழையன புகுதலும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பழையவைகள் அனைத்தையுமே நீக்கிவிடாமல் புதிய அனைத்தையுமே எடுத்துக்கொள்ளாமல் அவ்வப்பொழுது பரிசீலித்து தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

மதுரை மாநகராட்சிக்குக் கட்டடம்.

*621 வினு—**திரு. த. சோனையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்குப் புதிதாகக் கட்டப்படும் கட்டடத்தின் மொத்த மதிப்பீடு என்ன?

(இ) இதுவரையிலும் நடந்து இருக்கும் வேலையின் மதிப்பென்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) மதுரை மாநகராட்சிக்கு புதிதாகக் கட்டப்படும் கட்டிடத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 70.70 இலட்சம் (ரூபாய் எழுபது லட்சத்து எழுபதினுயிரம்).

(இ) டிசம்பர் 1973 முடிய நடந்து இருக்கும் வேலையின் மதிப்பு ரூபாய் 1,79,735 (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து).

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியினுடைய கட்டிடம் அஸ்திவாரம் இட்ட அளவோடுதான் இருப்பதாகத் தெரிகிறது. ஆனுல் அந்தக் கட்டிடத்தை வேகமாக முடிப்பார்கள் என்று மதுரை மாநகரத்து மக்கள் எதிர்பார்க்கிருர்கள். எனவே, அந்தக் கட்டிடத்தைச் சீக்கிரமாக முடிப்பதற்கும், இந்த ஆண்டு முடிவடையும் என்று காலவரையறுத்துச் சொல்வதற்கும் அரசால் இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 26

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, அடிக்கல் போடுவதற்கு 2,79,865 ரூபாய் குறிப்பிட்டு அதற்காகத் தனி ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிக்கல் வேலை முடிக்கப்பட்டு, மேல் வேலை இப்பொழுது துவக்கப்பட்டிருக்கிறது. வடக்குப் பகுதியில் தூண்கள் மேற்கூரை உயரத்திற்கு எழுப்பப்பட்டிருக்கிறது. மேலும் துரிதமாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தக் கட்டிடம் ஒரு குளத்தின் உள்ளே அமைந்திருக்கிறது. எனவே, மழைக்காலங்களில் அதிகமாகத் தண்ணீர் தேங்குகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, லெவலிங் போன்றவைகளுக்கு அதிகமாகப் பணம் செலவழிக்க வேண்டியிருக்குமே, அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அதை உத்தேசித்துத்தான் அடிமட்ட வேலைக்காகத் தனியாகத் திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டம் முடிந்திருக்கிறது. மேல் மட்டத்திற்கான திட்டங்கள் அளிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. கட்டிடத்திற்கு எந்தவிதமான கோளாறும் ஏற்படாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் கட்டிடம் குளத்தில் கட்டப்படுகிறது. கட்டிடம் முடிந்த பிறகு தண்ணீர் விடப்படுமா? அல்லது கட்டிடம் மட்டும்தான் நிற்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அது அந்த நேரத்தைப் பொறுத்தது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மதுரையிலே ஏற்கனவே உள்ள தெப்பக்குளத்தைப்போல் இந்தக் கட்டிடமும் தண்ணீருக்கு நடுவிலே ஆழமான இடத்திலே அமைய வேண்டுமென்று திட்டமிட்டுத்தான் அந்தக் கட்டிடம் அப்படி அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே அந்த முயற்சிகள் நடைபெறுமென்று நான் கருதுகிறேன்.

1974 மார்ச் 26]

திரு. த. சோனையா : தலைவரவர்களே, அந்தக் குளத்திலே மதுரை மாநகராட்சிக் கட்டிடம் கட்டப்படுகிறது. இப்பொழுது விஞ்ஞான நாகரீக காலத்திலே, மற்ற இடங்களில் ஏர் கண்டிஷன் என்று செய்து கொள்கிறார்கள். இதில் இயற்கையாகவே சுற்றித் தண்ணீர் இருப்பதால் ஏர்கண்டிஷன் அறையைப்போல் அலுவலாளர்களுக்குக் குளிர்ச்சி எந்த நேரத்திற்கும் இருக்கும் என்பதால், அதைச் சுற்றிலும் தண்ணீரை நிரப்பி அதை ஏர்கண்டிஷன் போன்ற அளவிற்குச் செய்வார்களா? மேலும், இந்தக் கட்டிடம் எந்த ஆண்டிற்குள் முடியும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கவில்லை என்று எண்ணுகிறேன்.

Labour dispute in Addison and Company

* 622 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken by the Government to settle the dispute between workers and management in Addison & Company, Madras?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த அடிசன் கம்பெனியில் தொழில் தகராறு ஏற்பட்டு, அதனால் வாலண்ட்ரியாக 333 பேர்களும், கம்பெனி டெர்மினேட் செய்ததால் 233 பேர்களும் வேலையிழந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கம்பெனி பவுண்டரியே மூடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி மறுபடியும் அந்த பவுண்டரி திறக்கப்பட வேண்டுமென்றும், வேலையிழந்த தொழிலாளர்களை 'ரீ-இன்ஸ்ட்டேட்' செய்ய வேண்டுமென்று லேபர் ஆபீசர் முன்பு அந்த விஷயம் இருப்பதாக அறிகிறேன். இந்தியாவிலேயே மிகவும் முக்கியமான பவுண்டரி. எனவே, இதைத் திறக்கும் முறையிலே சர்க்கார் ஆதரவு கொடுத்து, மறுபடியும் பரிசீலனை செய்கிறார்களா? அந்தப் பரிசீலனை எந்த அளவில் இருக்கிறது என்பதையும் அறிவிப்பார்களா?

@ 359-362-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.